பிப்ரவரி 14, 2023

# திருமண உரிமம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் தற்போது ஆன்லைனில் கிடைக்கின்றன

ப்ராம்ப்ட்டன், ON – திருமண உரிமம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் தற்போது ப்ராம்ப்ட்டன் நகரில் 24/7 அடிப்படையில் ஆன்லைனில் கிடைக்கின்றன. குடியிருப்புவாசிகள் திருமண உரிமம் பெற எந்த வேளையிலும் டிஜிட்டல் போர்ட்டலுக்குச் சென்று விண்ணப்பிக்கலாம். முன்னதாக ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நேரில் கொடுக்கப்படும் காகித வடிவ விண்ணப்பங்களையே நகர் மன்றத்தில் பெற்று வந்தது.

ஆன்லைன் திருமண உரிம விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதன் பேரில், விண்ணப்பதாரர் ஒரு மேற்கோள் எண் பெறுவார்; திருமண உரிமம் பெற நகர்மன்றத்திற்கு வரும்போது இதனை வழங்கவேண்டியது அவசியம்.

திருமண உரிம விண்ணப்பங்களை அணுக வேண்டிய போர்ட்டல்: www.brampton.ca/marriageservices.

## திருமண உரிமங்கள் பற்றி

திருமண உரிமங்களைப் பெற்ற தேதியில் இருந்து,  மூன்று மாதங்களுக்கு ஒன்ட்டாரியோவின் எந்தப்பகுதியிலும் இவை செல்லுபடியாகும் மற்றும் இவை பெரும்பாலான நகராட்சிகளில் கிடைக்கப் பெறுகின்றன.

ஒன்ட்டாரியோவில் திருமணம் செய்துகொள்ளவிருக்கும் எவரும் திருமணம் புரிவதற்கு முன்பாக திருமண உரிமம்  பெற்றாக வேண்டும். திருமண வைபவம் நடந்து முடிந்தபின்னர் உரிமம் வழங்கப்பட மாட்டாது.

### குடிமக்கள் திருமண சடங்குகள்

குடிமக்கள் திருமண சடங்குகள் தொடர்ந்து ப்ராம்ப்ட்டன் நகர் மன்ற அரங்கில் ஒவ்வொரு வாரமும் செவ்வாய்க்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை அலுவல் நேரங்களில் நடத்தப்படும்.

2022 ஆம் ஆண்டில், 1,300 குடிமக்கள் சடங்குகள் நடத்தப்பட்டன. 2016 ஆம் ஆண்டிலிருந்து நகர அலுவலர்கள் 3,000 க்கும் மேலான சடங்குகளை நடத்தியுள்ளார்கள்.

ப்ராம்ப்ட்டன் நகரின் குடிமக்கள் திருமண சடங்குகள் பற்றி மேலும் அறிய **இங்கு க்ளிக் செய்க**.

-30-

**ஊடக தொடர்பு**
ப்ராம்ப்ட்டன் நகர பன்முக கலாச்சார ஊடகம்
multiculturalmedia@brampton.ca